JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

CC. No. 15/2024 Crime No. 163/2023 Station Appakodal

| | | |
|---|---|---|
| Name | PW–1–சாவித்திரி | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 11th day of November 2025 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் பொதியமூப்பனூரில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன மயில்சாமி எனது அப்பா ஆவார். கடந்த 22.10.2023 ஆம் தேதியன்று இரவு சுமார் 07:30 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது தேவராஜ் என்பவர் எனக்கு போன் செய்து எனது அப்பா அவரது TVS 50 வாகனத்தில் பெரிய தொட்டிபாளையம் பொம்மிராஜ் காட்டுக்கு எதிரில் வந்து கொண்டிருந்தபோது, பைக் மோதி விபத்து ஏற்பட்டு விட்டதாக தகவல் தெரிவித்தார். நான் எனது உறவினர்களுக்கு சொல்லிவிட்டு எனது தங்கை மல்லிகாவுடன் விபத்து நடந்த இடத்திற்கு வந்து 108 ஆம்புலன்ஸ் மூலமாக எனது அப்பாவை அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு முதலில் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றேன். பின்னர் மேல் சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவக் கல்லூரிமருத்துவமனைக்கு எனது அப்பாவை அழைத்துச் சென்றேன். 23.10.2023 ஆம் தேதியன்று பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வந்த போலீசார் எனது அப்பா மயக்க நிலையில் இருந்ததால் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அங்கு சிகிச்சையிலிருந்த எனது அப்பா 30.10.2023 தேதியன்று சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். முப்பது 30.10.2023 தேதியன்று மதியம் பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற பிரேத விசாரணையின்போது எனது அப்பாவின் பிரேதத்தை அடையாளம் காட்டி உடன் இருந்தேன். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.11.11 19:01:49 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் இறந்த நபர் எனது அப்பா என்றால், சரிதான். சம்பவம் நடைபெற்ற நேரம் இரவு நேரம் என்றால், சரிதான். விபத்து சமயத்தின்போது எனது அப்பா தலைக்கவசம் எதுவும் அணியவில்லை என்றால், சரிதான். எனது அப்பா ஓட்டிச் சென்ற வாகனத்திற்கு பதிவு சான்றிதழ், ஓட்டுநர் உரிமம் மற்றும் காப்பீடு எதுவும் இல்லை என்றால், சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். போலீசார் எனக்கு படித்துக் காட்டவில்லை என்றால், சரிதான். எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.11 19:01:55 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-2 Witness
for Prosecution

CC. No. 15/2024 Crime No. 163/2023 Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW–2–தேவராஜ் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 11th day of November 2025 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் செட்டிக்குட்டையில் குடியிருந்து கொண்டு, செங்கல் சூளை வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 22.10.2023 தேதியன்று இரவு சுமார் 07.00 மணியளவில் நான் சுக்கநாயக்கனூர், பெரிய தொட்டிபாளையம், பொம்மிராஜ் காட்டுக்கு அருகில் வந்து கொண்டிருந்தபோது கூட்டமாக இருந்தது. அருகில் சென்று பார்த்தபோதுஅங்கு TVS 50 ம் பைக்கும் மோதி விபத்து ஏற்பட்டு இருந்தது. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து நடைபெற்ற பிறகு தான் பார்த்தேன். பின்னர் விபத்தில் காயம் பட்டவர்களை அருகில் இருந்தவர்களின் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 22.10.2023 ஆம் தேதியன்று இரவு சுமார் 07.00 மணியளவில் ஆப்பக்கூடல் to குண்டடம் ரோடு, சொக்கநாயக்கனூர், பெரிய தொட்டிபாளையம், பொம்மிராஜ் காட்டுக்கு அருகில் நானும், தம்பிக்கலையன் என்பவரும் நின்று பேசிக் கொண்டிருந்ததாகவும், அப்போது இந்த விபத்தில் இறந்துபோன மயில்சாமி என்பவர் அவரது TVS 50 வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டின் இடது புறமாக வந்து கொண்டிருந்ததாகவும், அதே திசையில் அவருக்கு பின்னால் வந்த பைக் வேகமாக வந்து TVS 50 மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டதாகவும், அந்த விபத்தை நாங்கள் நேரில் பார்த்ததாகவும், அருகில் சென்று பார்த்தபோது மயில்சாமிக்கு

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.11 19:02:03 +0530

பின் தலையிலும், தோள்பட்டையிலும் பலத்த காயம் ஏற்பட்டு இருந்ததாகவும், பின்னர் மயில்சாமியின் குடும்பத்தாருக்கு தகவல் தெரிவித்ததாகவும், அந்த பைக்கை ஓட்டி வந்தவரை பற்றி விசாரித்தபோது அவர் சிவா என்று தெரிந்து கொண்டதாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.11 19:02:08 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.